பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 29 (12—3—68) செவ்வாய் ★ வெளியூர்: மாசி 30 (13—3—68) புதன் [இதழ்: 225

குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்

திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத குடும்பம். சுகாதாரச் செழிப்புப் பெற்றும் சுகமாக வாழவும், அனைவரும் உணவு, உடை, உறையுள் வசதிகள் பெறவும், குடும்பத்துக்கு ஓர், இரு குழந்தைகள் இருப்பதே நல்லது.

காமராசருக்குச் சில கேள்விகள்!

துக்கம் விசாரிக்கச் செல்லும் சில பேர் தங்களது பழைய துக்கங்களை மட்டுமே நினைத்து அழுவது வழக்கம்!

மொழித் துறையில் சுமை பெற்றிருப்பதனால், இந்தி எதிர்ப்பு உணர்ச்சி கொண்டிருக்கும் மாணவர்கள் மத்தியில் பேசியிருக்கும் காமராசர், தாம் எப்படித் தோற்க நேர்ந்தது என்பது பற்றி ஒரு சுய ஆராய்ச்சி அறிக்கையினை வெளியிட்டிருக்கிறார்!

கேள்வியும்—பதிலுமாகப் பேசி, கேட்பவரை வசப்படுத்தியும், கேளாதவரையும் வசீகரித்தும் சொற்பெருக்காற்றும் காமராசர்,

"மாணவர்களா என்னைத் தோற்கடித்தார்கள்?"

என்று கேள்வியை எழுப்பியிருக்கிறார்.

பாவம்! மாணவர்களுக்கு அவரது மேடைப் பேச்சைக் கேட்டுப் பழக்கமில்லை! எனவே, தங்களைத்தான் கேள்வி கேட்கிறாரோ என்று நினைத்து,

'மொழி'

என்று பதிலளித்திருக்கிறார்கள்.

தாமே கேள்வியைக் கேட்டு—தாமே பதிலும் சொல்லிப் பேசும் வழக்கமுடையவராயிற்றே, காமராசர்! எனவே, தமது கேள்விக்கு மாணவர்கள் தந்த பதிலை, அவர் ஏற்றுக்கொள்ளவில்லை!

"அரசியலில் என்னைத் தோற்கடித்ததாகச் சொல்லுகிறார்கள்; 'மாணவர்கள் தோற்கடித்தனர்' என்கிறார்கள்; (கூட்டத்தில், 'மொழி' என்று ஒருவர் கூறினார்) மொழிகூட அல்ல; பணம் தோற்கடித்தது— பணக்காரர்கள் தோற்கடித்தவர்கள்; மாணவர்கள் வெறும் பொம்மைகள்தானே!"

என்று நேற்று பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் காமராசர் பேசியிருப்பதாக இன்று பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருக்கிறது!

"மாணவர்கள் படிக்காமல், பட்டம் வாங்கப் பார்க்கிறார்கள்"

என்று சுப்பிரமணியம் கூறியதனால் எழுந்த பிரச்சினைகள் இப்போதுதான் அமைதிக்கு வந்திருக்கிறது!

அதற்குள்ளாக இப்போது, அவருக்கும் பெரிய தலைவரான காமராசர், 'மாணவர்கள் வெறும் பொம்மைகள்தானே!' என்று கூறி, தமது தோல்விக்கு வேறொரு காரணமும் கூறி, 'மாணவர்கள், கைப்பாவைபோல் ஆடினார்கள்' என்ற உள் கருத்தையும் சேறுபோல் வாரி இறைத்திருக்கிறார்!

1967 பொதுத் தேர்தல் பற்றி இதுவரையில் காமராசர் கூறிய இரண்டொரு கருத்துக்கள், தேர்தல் குழு வரையில் சென்று சரியான மறுப்புரைகளைப் பதிலாகப் பெற்றுத் தந்திருக்கிறது!

இப்போது, தமது தேர்தல் முடிவு பற்றியே புதிதாக ஒரு தடவை, காரணம் கற்பித்திருக்கிறார் காமராசர்!

"விருதுநகரில் பெரும்பாலோர் வர்த்தகர்கள்; நான் எப்போது சர்க்கார் வர்த்தகம் பற்றிப் பேசினேனோ—அப்போதே—தங்கள் வியாபாரத்துக்குக் கேடு வந்துவிடுமோ என்று என்னைத் தோற்கடித்தார்கள்"

—"மாணவர்கள் வெறும் பொம்மைகள்" என்பதற்குக் காமராசர் கூறியிருக்கும் காரண விளக்கம் இது!

தாங்கள்தான் காமராசர் தோல்விக்குக் காரணம்—என, பச்சையப்பன் கல்லூரிக் கூட்டத்தில், எந்த மாணவரிடமிருந்தும் பதில் வரவில்லை; ஏனெனில், காமராசர், 'நான் ஏன் தோற்றேன் தெரியுமா?' என்று கேள்வியைக் கேட்டு அவரே பதில் சொல்லுவதற்கு முன்பு,

'மொழி'

என்ற குரல் மாணவர் தரப்பிலிருந்து வெளிப்பட்டிருக்கிறது!

ஆனால், 'மொழி'யும் அல்ல—'விருதுநகர் வியாபாரிகள்தான்' என்று காமராசரே இப்போது ஒரு புதிய காரணம் கூறியிருக்கிறார்!

'விருதுநகர் தேர்தலில் அமெரிக்கப் பணம்' என்ற பிரச்சினை—முன்பு பலமாகப் பேசப்பட்டு—நாடாளுமன்றம் வரையில் சென்று—பின்பு, மத்திய அரசினரால் அதிகாரபூர்வமாக மறுக்கப்பட்டது; ஆனால், இங்கே இருக்கும் காங்கிரசுக்காரர்கள் மட்டும், நெடுநாட்கள் வரையில், அந்த 'அமெரிக்கப் பணம்' என்ற கதையைப் பேசியும் எழுதியும் வந்தனர்!

"அமெரிக்கா வரையில் போகவேண்டியதில்லை; எல்லாம் சொந்த ஊர் வியாபாரிகள்தான்—விருதுநகர்க்காரர்கள்தான்" என்ற—உலகம் தெரிந்து கொள்ள விரும்பிய செய்தியைக் காமராசர், பச்சையப்பன் கல்லூரிக் கூட்டத்தில் முதன்முதலாக வெளிப்படுத்தியிருக்கிறார்!

காமராசர் இப்போது கூறியிருக்கும் காரணத்தை, இனி தொடர்ந்து ஒப்புக்கொள்கிறார் என்றால், அதன்மீது சில கேள்விகளும் நமக்கு எழுகின்றன:—

★ விருதுநகரிலுள்ள எந்த வியாபாரத்தைக் காமராசர் அரசுடைமையாக்கப் போவதாக அறிவித்தார்?

★ அது போன்ற வியாபாரம் தமிழ்நாட்டில் வேறு எங்கும் இல்லையா?

★ அந்த வியாபாரத்தில் ஈடுபட்டவர்களெல்லாம், 'காங்கிரசுக்காரர்கள் அல்லர்' என்று மெய்ப்பிக்க முடியுமா? அல்லது, 'காமராசருக்கு வேண்டியவர்கள் அல்லர்' என்றுதான் கூறமுடியுமா?

★ '20 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தேன்' எனக் கூறியிருக்கும் காமராசர், 1967-ல்தான் அந்த வியாபாரங்களை, 'அரசுடைமையாக்குவேன்' எனக் கூறினாரா? அப்படியென்றால், அதற்கு முன்பாக—1962-ல், 1957-ல் ஏன் கூறவில்லை? அப்படியே பார்த்தாலும், 1967-ல் காமராசர் தமிழ்நாட்டில் நேரிடையாக ஆட்சியில் இல்லையே? அவரது கட்சியின் சார்பாக நிர்வாகத்தில் இருந்தது பக்தவத்சலம் அமைச்சரவை ஆயிற்றே? ஒருவேளை, 'காமராசர் தோல்வி பெற வேண்டும்' என்பதற்காக, விருதுநகர் வியாபாரிகளைக் காமராசருக்கு எதிராகத் திரண்டெழ பக்தவத்சலம், அந்த யுக்தியைக் கண்டு பிடித்தாரா?

★ ஓர் அனைத்திந்தியக் கட்சியின் பெரிய தலைவர், தமது சொந்த ஊர் வியாபாரிகளால் சாதாரணமாகத் தோற்கடிக்கப்படும் அளவுக்கா மற்றைய அரசியல் தகுதிகள்—பெருமைகள்—சாதனைச் சிறப்புகள்—இல்லாமலிருந்தார்?

★ "நான் வெற்றிபெற்றிருந்தால், இன்று, இந்தியினால் இந்த சுமை வராமல் பார்த்துக்கொண்டிருப்பேன்" என்று அதே பச்சையப்பன் கல்லூரியில் பேசியிருக்கும் அளவுக்கு, தனிப் பெருமை—திறமை கொண்டிருக்கும் காமராசருக்கு அதே தகுதிகளை வைத்துச் சொந்த ஊர் வியாபாரிகளின் சூழ்ச்சியை முறியடிப்பது அத்துணை கடினமான காரியம் இல்லையே?

★ தமது தோல்வி மாணவர்களால் பெற்றதும் இல்லை—கட்சியின் தோல்வியும் இல்லை—மொழிப் பிரச்சினையினால் கிடைத்த தோல்வியும் இல்லையென்றால், பக்தவத்சலம்—சுப்பிரமணியம்—முதல் மற்ற மற்ற மத்திய, மாநில அமைச்சர்களெல்லாம் தமிழ்நாட்டில் தோற்றதற்குக் காமராசர் என்ன காரணம் கூற முடியும்?

★ பொதுத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வி கிடக்கட்டும்; அதற்குப்பின்னால் புதுடில்லியில், அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவர் தேர்தல் நடந்ததே—அதில், காமராசர் போட்டியிடவே முடியாத நிலை இருந்ததே— அதற்கு எந்த ஊர் வியாபாரிகள் சூழ்ச்சி செய்தார்களாம்?

(4-ம் பக்கம் பார்க்க)

ரூ. 130-கோடியில் 1.50-கோடியே தமிழகத்திற்கு!

அந்த உதவியும் நிறுத்தப்பட்டுவிட்டது

கோதுமைக்கு அதிக விலை--டில்லி அரசே காரணம்--- சட்டமன்றத்தில் அமைச்சர் மதியழகன் குற்றச்சாட்டு

சென்னை, மார்ச் 12—

"கோதுமைக்கு டெல்லி அரசு வழங்கிவந்த உதவித் தொகை நிறுத்தப்பட்டுவிட்டதால், ஏற்கனவே டன் ரூ. 550-க்குக் கிடைத்துவந்த கோதுமையை, இப்போது ரூ. 670 கொடுத்து வாங்கவேண்டியுள்ளது"

என்று இன்று சட்டமன்றத்தில், உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் வருத்தத்துடன் குறிப்பிட்டார்.

கழக உறுப்பினர் ஈரோடு சின்னச்சாமி கேட்ட ஒரு துணைக் கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:—

நாம் படியரிசித் திட்டத்திற்கு மானியம் வழங்குவதுபோல் மத்திய அரசு கோதுமைக்கு மானியம் வழங்கிவந்தது; டன்னுக்கு ரூ. 120 விதம் அந்த மானியம் வழங்கப்பட்டு வந்தது.

1—1—68 முதல் இந்த மானியம் நிறுத்தப்பட்டுவிட்டதால் கோதுமைக்கு அதிக விலை கொடுத்து வாங்க நேரிட்டுள்ளது.

ரூ. 66-க்கு விற்றுவந்த கோதுமை மூட்டையை இப்போது ரூ. 81-க்கு விற்க வேண்டியுள்ளது.

இந்திய அரசு, நாடு முழுவதுக்குமாகக் கொடுத்துவந்த கோதுமை உதவித் தொகை ரூ. 130 கோடியாகும். இதில் நமது மாநிலத்துக்குக் கிடைத்தது 1 கோடியிலிருந்து $1\frac{1}{2}$ கோடிவரைதான் என்பது குறிப்பிடத்தக்கது. மற்ற தொகையெல்லாம் ஏனைய மாநிலங்களுக்கே கிடைத்தன. நமக்குக் கிடைத்துவந்த இந்தச் சொற்ப உதவியும் நிறுத்தப்பட்டுவிட்டது.

முதலமைச்சர்கள் மாநாட்டுக்குச் சென்றிருந்தபோது, இந்த உதவித் தொகையை நிறுத்தக் கூடாது என்று மத்திய அரசிடம் வற்புறுத்திவிட்டு வந்தேன்; எனினும், அது நிறுத்தப்பட்டிருக்கிறது.

நமக்கு மட்டுமன்றி, இந்தியா முழுமைக்குமே கோதுமை உதவித் தொகை தொடர்ந்து கொடுக்கவேண்டும் என்றுதான் நாம் வற்புறுத்திவருகிறோம்.

ஆனால் காஷ்மீர் மாநிலத்துக்கு மட்டும் இந்தச் சலுகை தொடர்ந்து இருந்துவருகிறது; 'ஏன்' என்று கேட்டால், 'காஷ்மீர் மற்ற மாநிலங்களைப் போலல்லாமல் தனியாகக் கவனிக்கப்பட வேண்டியுள்ளது' என்று கூறுகிறார்கள்."

கூவம் முதல் கோட்டை வரை..!

★

'உள்ளும் புறமும்'

பகுதியில்

நாளை பயணம்!

பாரதியாருக்கு நினைவுச் சின்னம்

தமிழக அரசின் முயற்சி-- அமைச்சர் விளக்கம்

சென்னை, மார்ச் 12—

"எட்டயபுரத்தில் பாரதியார் வாழ்ந்த வீட்டை விலைக்கு வாங்கி, நினைவுச் சின்னமாக்க இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது"

என்று, இன்று சட்டமன்றத்தில் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

துணைக் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"எட்டயபுரத்தில் பாரதியார் வாழ்ந்த வீடு, இப்போது தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமாக உள்ளது; அதை ரூ. 14,000 வரை விலை கொடுத்து வாங்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் மதிப்பிட்டுப் பரிந்துரை செய்துள்ளார். ஆனால், அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர், ரூ. 35,000 வரை கேட்டுக்கொண்டிருக்கிறார்.

"இந்த நல்ல காரியத்துக்கு இலாபம் கருதாமல் இனாமாகக்கூட அந்த வீட்டை அவர் நல்கலாம்; ஆனால், ரூ 35,000 கேட்பதால், சட்டப்படி அந்த வீட்டைப் பெற தக்க ஏற்பாடுகள் செய்வது பற்றி அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

"கடயத்தில் பாரதியாரின் மனைவி வாழ்ந்த வீட்டை வாங்கும் எண்ணம் அரசுக்கு இல்லை; ஏனென்றால், பாரதியாருக்குத்தான் நாம் மரியாதை செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்; அவருடைய உறவினர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னம் ஏற்படுத்துவதென்றால் அது முடிவு பெறாது.

"மேலும், கவிஞர் பாரதியாரின் கவிதைகளை அரசே வெளியிட்டிருக்கிறது. பாரதியாருக்கு உலகத் தமிழ் மாநாட்டையொட்டி உருவச் சிலையும் சென்னையில் வைக்கப்பட்டிருக்கிறது. அவருடைய நினைவு நாள் கொண்டாடப்படுகிறது."

தமிழக அரசின் மொழிக்கொள்கையே சரியானது--சாலச்சிறந்தது

பஞ்சாப் நாடாளுமன்றப் பெண் உறுப்பினர் கருத்து

புதுடில்லி, மார்ச் 11—

" தமிழகத்தில் அமைந்துள்ள தி. மு. கழக அரசின் மொழிக் கொள்கையே சரியானதும் சாலச்சிறந்ததும் ஆகும்; ஆங்கிலமே இந்தியாவின் இணைப்பு மொழியாக இருக்கத் தகுதி வாய்ந்தது; இந்தி ஆதரவாளர்கள் கூறுவதுபோல், இந்தி பெரும்பான்மையினர் மொழி அல்ல !

" தி. மு. கழக அரசு இந்திக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது முற்றிலும் நியாயமானதாகும். மொழிக் கொள்கையில் தமிழக அரசு மேற்கொண்டுள்ள முடிவு பாராட்டத்தக்கது "

என்று பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த அகாலி தள நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி நிர்லாப் கவுர் கருத்தறிவித்தார்.

நிர்லாப் கவுர், சாந்த் பதே சிங் தரப்பைச் சேர்ந்த அகாலிதளத்தின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராவார்; பஞ்சாப் மாநில அரசியலில் முன்னணிக்கு வந்துகொண்டிருக்கும் அவர், பாட்டியாலா மன்னரின் நெருங்கிய உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

பஞ்சாப் அரசியல் நிலவரங்கள் குறித்தும், அனைத்திந்திய ரீதியிலும் அவர் பல கருத்துக்களை வெளியிட்டார். செய்தியாளரிடம் அவர் மேலும் கூறியதாவது :—

" மொழிக் கொள்கையில் தி. மு. கழகம் சரியான வழியையே கடைப்பிடிக்கிறது. தமிழக அரசு இந்திக்கு எதிர்ப்பு தெரிவித்திருப்பதை நான் முழு மனத்துடன் ஆதரிக்கிறேன்.

" இந்தியாவில் இந்தி பெரும்பான்மையினர் பேசும் மொழி என்று கூறப்படுவது தவறாகும். பஞ்சாபில் பஞ்சாபி மொழியையும், இராஜஸ்தானில் இராஜஸ்தானியும், பீகாரில் பீகாரியும், இந்தி பேசுவோரின் மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் உருது மொழியுமே பேசப்படுகின்றன. இங்கிலையில், 'இந்தி எங்குமே பெரும்பான்மையினரால் பேசப்படுவதில்லை' என்றே கூறியாக வேண்டும்.

" ஆகவே, இந்தியாவுக்கே இணைப்பு மொழியாக இருக்க ஆங்கிலமே தகுதி வாய்ந்தது. பல மொழிகள் பேசும் பல்வேறு இன மக்களிடையே அனைவருக்கும் பொதுவான ஓர் மொழியாக ஆங்கிலம் விளங்குகிறது. ஆங்கில மொழியில் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ள இந்திய நாடு, ஆங்கில மொழியை நிரந்தரமாக ஏற்றுக்கொள்வதில் என்ன தவறு? ஆங்கிலத்தை இந்தியா கைவிட வேண்டிய அவசியம் என்ன ?"

சுப்பிரமணியத்துக்கு ஏது அந்த அருகதை ?

கேட்கிறார் கன்னடக்காரர் !

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமக்கு மனநிறைவு ஊட்டவில்லை என்று தமிழகக் காங்கிரசுக் கட்சித் தலைவர் சி. சுப்பிரமணியம் கூறியுள்ளதைத் தொடர்ந்து பெங்களூரைச் சேர்ந்த வேதாந்தா என்பவர் 'டெக்கான் ஹெரால்டு' நாளேட்டில் ஒரு கடிதம் வரைந்திருக்கிறார்; அதில் அவர் தெரிவித்துள்ளதாவது :—

"காங்கிரசுக் கட்சியைத் தேர்தல் மூலம் வீட்டிற்கு அனுப்புவதற்கு முன்னால், துன்பம் மிக்க 20 ஆண்டுகள் பொறுமையுடன் காத்திருந்த பொதுமக்கள்தாம் மீண்டும் இன்றையக் கழக ஆட்சியைப் பற்றித் தீர்ப்பு வழங்க வேண்டுமேயன்றி, தேர்தலில் செல்வாக்கிழந்து தோற்றுப் போன காங்கிரசுத் தலைவர் போன்றவர்களுக்கு இதைப் பற்றிப் பேச அருகதை இல்லை !

"காங்கிரசு எதிர்ப்புணர்ச்சி வெள்ளத்தில் நீந்திவந்து ஆட்சியைக் கைப்பற்றிய திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அது மேற்கொள்ளும் பொது நலத் திட்டங்களுக்கு மக்களிடமிருந்து கிடைத்துவரும் ஆதரவையும் பார்க்கும்பொழுது, இந்தக் குறுகிய காலத்தில் நன்றாகவே ஆட்சி புரிந்திருக்கிறது என்றே கொள்ள வேண்டியிருக்கிறது.

"இருக்கிற முதலமைச்சர்களில் தலைசிறந்தவரான திரு. அண்ணாதுரை, 'மக்கள் வாக்கே மகேசன் வாக்கு' என்ற அறிவுரையைப் பின்பற்றி வருகிறார் !

"மக்கள் தீர்ப்பை விடுத்து ஒரு சனநாயக ஆட்சிக்குத் தேவையானது என்ன இருக்கமுடியும்?"

காங்கிரசுக்குப் புதுப் பொருள்!

'கன்னட சாகித்திய பரிஷத்' என்ற அமைப்பு, கன்னட அகராதி ஒன்றைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

மேற்கு வங்காள அரசியல்வாதிகள் காரணமாகப் புகழடைந்துள்ள 'கெரோ' என்ற சொல்லும் அதில் சேர்க்கப்பட்டுள்ளதாம்.

'கும்பகோணம் செய்வது' என்பது எந்தப் பொருளில் ஆங்கில அகராதியில் சேர்க்கப்பட்டுள்ளதோ, அதே பொருளில், 'காங்கிரசு' என்ற சொல்லுக்கும் அதில் பொருள் தரப்பட்டுள்ளதாம் !

கன்னட மக்களை ஏமாற்றும் தந்திரம்

ச. சோ. கட்சியினர் எழுப்பும் புதிய 'கோஷம்'!

போலீசு அடக்குமுறையையும் மீறி, பெங்களூரில் மாணவர்கள் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபொழுது, ஆங்காங்கே சிலர், இந்தியைப்பற்றி எதுவும் பேசாமல், 'கன்னட பாலவி' (கன்னடம் வாழ்க) என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் வேகத்தைத் தணிப்பதற்காக இந்தி வெறியர்கள் கன்னடத்தின் போர்வையில் பரப்பி வந்த 'கோஷம்'தான் இது என்பது, இப்பொழுது தெரிய வந்திருக்கிறது!

இந்தி வெறியர்களின் கட்சியாகிய சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி விரைவில் இங்கே சோஷலிச இளைஞர்கள் மாநாடு ஒன்றை நடத்தப் போகிறதாம்!

'கன்னட பெளிசி; இங்கிலீஷ் இளிசி' (கன்னடத்தை வளருங்கள்; ஆங்கிலத்தை இறக்குங்கள்) என்ற கோஷத்தை மக்களிடம் பரப்புவதுதான் அம்மாநாட்டின் நோக்கமாம் !

இலக்கம்பட்டி குடிநீர்த் திட்டம்

இம்மாத இறுதிக்குள் முடியும்

சென்னை, மார்ச் 8—

" கோவை மாவட்டம் கோபிச்செட்டிபாளையம் வட்டத்திலுள்ள இலக்கம்பட்டி ஊராட்சிக்குப் பாதுகாக்கப் பெற்ற நீர் வழங்கும் திட்டத்தை நிறைவேற்றும் பணி 1968 மார்ச் மாத இறுதிக்குள் முடியும் "

என்று சட்டமன்றத்தில், அமைச்சர் சாதிக்பாட்சா அறிவித்தார்.

கோதுமை ஒதுக்குவதில் மத்திய அரசு 'கருணையற்ற' போக்கு

தேவையைச் சமாளிக்கத் தமிழக அரசு படும்பாடு

உணவமைச்சர் மதியழகனின் உருக்கமிக்க விளக்கம்

சென்னை, மார்ச் —

தமிழகத்திற்குத் தேவையான கோதுமை—கோதுமைப் பண்டங்கள் ஒதுக்குவதில் மத்திய அரசு எந்த அளவுக்குக் கருணையற்று நடந்துகொள்கிறது என்பதையும், மக்களின் தேவையைச் சமாளிக்கத் தமிழக அரசு எந்த அளவுக்குக் கவலையோடு முயற்சிகளைச் செய்துவருகிறது என்பதையும் உணவுத் துறை அமைச்சர் கே.ஏ. மதியழகன் சட்டமன்றத்தில் அளித்த குறிப்புரையில் பின்வருமாறு விளக்கியுள்ளார் :—

" நம்முடைய மாநிலத்திற்கு ஒரு மாதத்திற்கு 15,000 டன்கள் கோதுமை தேவைப்படுமென்று நாம் சென்ற சில ஆண்டுகளின் அனுபவத்திலிருந்து அறிந்துள்ளோம்.

கோதுமையை அதிகமாக உட்கொள்ளுவதற்குத் தூண்டுதலாகப் பொதுமக்களிடையே அரசாங்கம் செய்துவந்த பிரசாரம் நல்ல பலனளிக்கும் கட்டத்திலுள்ளது.

ஆனால் இந்தப் பிரசாரத்தின் பலனாக நல்ல பலன் ஏற்பட்டு, பெருவாரியான மக்கள் கோதுமையை விரும்பிக் கேட்கும் நேரத்திலே, மத்திய அரசு நம் மாநிலத்திற்கு ஒதுக்கும் கோதுமையின் அளவை மிகவும் குறைத்துவிட்டது வருந்தத்தக்கது.

1965-ம் ஆண்டில் 81,700 டன்கள் கோதுமையை மத்திய அரசு நம் மாநிலத்திற்கு ஒதுக்கியிருந்தது. தேவை அதிகமாக இருந்ததை முன்னிட்டு 1966-ம் ஆண்டில் 1.46 இலட்சம் டன்கள் கோதுமை வழங்கப்பட்டது; ஆனால் 1967-ம் ஆண்டில் 51,500 டன்கள் கோதுமைதான் இந்த மாநிலத்திற்கு மத்திய அரசினால் ஒதுக்கப்பட்டது.

1967-ம் ஆண்டில் நமக்கு ஒதுக்கப்பட்ட கோதுமையின் அளவு, 1966-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட அளவில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பாகம்தான்; 1965-ல் நமக்கு வழங்கப்பட்டதைவிடக்கூட குறைவாகும்.

மைதா, ரவை, ஆட்டா, கோதுமைத் தவிடு போன்ற கோதுமைப் பொருள்களைப் பொறுத்தவரை, தமிழகத்திற்குத் தேவைப்படும் அளவு மாதத்திற்கு 15500 டன்கள் ஆகும். இப்பொருள்களின் ஒதுக்கீடுகூட மத்திய அரசினால் மிகக் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

1965-ம் ஆண்டில் கோதுமைப் பொருள்கள் 1.1 இலட்சம் டன்கள் நம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டன; 1966-ல் 1.72 இலட்சம் டன்கள் ஒதுக்கப்பட்டன; ஆனால், 1967-ம் ஆண்டில் நமக்கு ஒதுக்கப்பட்டது 1.1 இலட்சம் டன்களுக்கும் குறைவாகும்.

இவ்வாறு தமிழகத்திற்கு ஒதுக்கப்படும் கோதுமைப் பண்டங்களின் அளவு மிகவும் குறைக்கப்பட்டுவிட்டதால், ரொட்டி, பிஸ்கட் உற்பத்தியாளர்களின் மைதா தேவைகளையும், தனிப்பட்டவர்களின் ரவை தேவையையும் நம்மால் போதிய அளவு நிறைவு செய்ய முடியவில்லை.

தமிழகத்திற்கு ஒதுக்கப்படும் கோதுமை, கோதுமை பொருள்கள் ஆகியவற்றின் அளவை உயர்த்த வேண்டுமென்று முதலமைச்சரும் நானும் பலமுறை மத்திய உணவு அமைச்சரிடத்தில் வற்புறுத்தி எடுத்திச் சொல்லியுள்ளோம். பலமுறை எடுத்துச் சொல்லியும் பலன் ஒன்றும் ஏற்படவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது.

1968-ம் ஆண்டில் முதல் மூன்று மாதங்களுக்கு ஒதுக்கீட்டைப் பார்த்தால், இந்த ஆண்டிலும் இப்பொருள்களின் ஒதுக்கீடு கணிசமாக உயராதென்று தெரிகிறது. இதனால் நமக்கு மிகவும் சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளது.

தமிழகத்திற்கு வேண்டிய கோதுமையையும் கோதுமைப் பொருள்களையும் தருவதில் மத்திய அரசு இன்னும் தாராளமாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்துவதில் இந்த அவையின் ஆதரவு எனக்குக் கிட்டுமென்று நம்புகிறேன்."

தமிழக அரசு உணவுக் கொள்கையின் மகத்தான வெற்றி!

படியரிசித் திட்டத்தால் மாநிலம் முழுவதும் பலன் பெறுகிறது!

பத்தாண்டு நிலவிய விலைவாசி ஏற்றம் இறங்குமுகம் கண்டது

எதிர்க்கட்சியினரின் முரண்பட்ட வாதத்துக்கு சூடு--- அமைச்சர் கே.ஏ. மதியழகன் உரைமீது 'மெயில்' ஏடு வழங்கும் பாராட்டு

9—3—68 'மெயில்' ஏடு தமிழக அரசின் உணவுக் கொள்கையின் வெற்றி குறித்து தீட்டிய தலையங்கத்தின் சுருக்கம் வருமாறு :-

" தமிழக உணவு அமைச்சர் சட்டமன்றத்தில் அளித்த குறிப்புரையும், விளக்கவுரையும், தமிழக அரசின் உணவுக் கொள்கையை நன்கு புரிந்துகொள்ள உதவின.

தேர்தல் கண்ணோட்டத்துடன் கொண்டுவரப்பட்டபோதிலும், படியரிசித் திட்டம், மதிநுக சிந்தனையுடனும், துணிவுடனும் செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் இவ்வாண்டு அபரிமிதமான உணவுப் பெருக்கம் ஏற்பட்டதற்கு அவர்களே காரணம் என்பதுடன், நாடு முழுவதும் பின்பற்றத்தக்க சிறந்த உணவுக் கொள்கையையும் உருவாக்கியவர்கள் ஆவார்கள்.

'இத்திட்டம், மக்களின் ஆசையைத் தூண்டும் வீண் செலவுக்குரிய திட்டம்—மத்திய அரசின் உதவியை எதிர்பார்க்கும் திட்டம்' என்பதெல்லாம் பொய்த்து விட்டது !

மாண்புமிகு அமைச்சர் மதியழகன் அவர்கள், மிகச் சரியாகக் குறிப்பிட்டதுபோல், இத்திட்டத்தை இடித்துரைப்பவர்களே, இத்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்பது, 'இத்திட்டத்தின், அடிப்படையில் தவறு இல்லை' என்பதைத்தான் காட்டுகிறது.

ஓர் எல்லைக்குள், தேவையானவர்களுக்கு உதவி செய்யக்கூடிய வகையில் நிறைவேற்றக் கூடிய திட்டமே அது !

அத்திட்டத்தைப் பற்றி ஏற்படக்கூடிய தவறான கருத்தை நீக்குவது முதற்பணியாகும்; இரண்டாவதாக—சென்ற ஆண்டு ஏற்பட்ட ஓரளவு வெற்றியைக் கொண்டு, அளவுகடந்து அதிக ஆசை கொள்ளாதிருத்தல் வேண்டும்.

அத்திட்டத்தின் முதல் நோக்கம் முழுதும் நிறைவேறிவிட்டது. இதில் மத்திய அரசின் பங்கு பற்றித் தவறான கருத்துக்கு இடமில்லை. இத்திட்டத்தின் செலவு குறித்து அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். திரு. மதியழகன் குறிப்பிட்டதுபோல், உணவுப் பண்டங்களின் விலை இறக்கத்திற்கான உதவித் தொகை ரூ. 5.1 கோடியில், ரூ 2.56 கோடியே படி அரிசித் திட்டத்திற்குச் செலவிடப்பட்டிருக்கிறது. இதுவே, 'இத்திட்டம் அளவுகடந்த பண விரயமாகும் அபாயத் திட்டம்' என்ற கருத்தைப் போக்கும். இதை மேலும் விரிவுபடுத்தவும், உணவுக் கொள்கையில் மாற்றத்தை அளிக்கவும் ஊக்கம் அளிக்கும்.

தமிழகத்திலுள்ள இன்றைய சூழ்நிலையில், விவசாயிக்கு உதவுவதுபோல்—'கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்' என்ற கூச்சலுக்கும் நியாயமில்லை ! உணவுப் பொருள் விலைகளும் இறங்குமுகம் கண்டிருக்கின்றன ! இதனால், கடந்த பத்து ஆண்டுகளில், விலையேற்றத்தால் ஏற்பட்ட அவதியை மறந்துவிடுவது விநோதமானதே !

தமிழக அரசு சிறிய நிலவுடைமைக்காரர்களுக்கு விலக்கு அளித்திருந்தும்கூட, நல்லமுறையில் கொள்முதல் செய்திருக்கிறது; அத்துடன், பக்கத்திலுள்ள ஆந்திர மாநிலத்தில் கொள்முதல் விலை உயர்த்தப்படவில்லை என்பதையும் தமிழக அரசு உணர்ந்திருக்கிறது.

இத்திட்டம் அமுலில் உள்ள பகுதியில் மட்டுமன்றி அமுலில் இல்லாத பகுதியிலும் நிலவும் சீரான விலைவாசி மூலம், பொதுவாக எல்லா இடங்களுக்குமே இத்திட்டத்தின் நன்மை கிடைக்கிறது; ஆகவே, இத்திட்டத்தை விரிவுபடுத்தித்தான் ஆக வேண்டுமென்ற வேண்டுகோளுக்குப் பொருளில்லை !"

அவர் முன்னே வந்தார்-மழை பின்னே வந்தது !

நைஜீரியாவின் விருந்தினராக வந்திருக்கும் வெளிவிகாரப் பொறுப்பாளர் டாக்டர் ஒகி அரிக்போவுக்கும் — மழைக்கும் ஏதோ பொருத்தம் இருப்பதாக மலேசியாவின் மலாக்கா பகுதி மக்கள் நம்புகின்றனர் !

பல காலமாக மழையையே காணாத மலாக்கா, நேற்று முன்நாள் அவர் வந்ததும், பலத்த மழையைப் பெற்றது !

இதனையறிந்த அந்த நைஜீரிய விருந்தாளி, 'நான் வந்தேன்—மழையும் வந்தது; நான் இங்கிருந்து திரும்பிய பின்னரும் மழை பெய்யும்' என்று கூறியிருக்கிறார் !

அதுபோலவே அவர் மலாக்காவை விட்டுப் புறப்பட்டதும் திரும்பவும் மழை பெய்திருக்கிறது !

பம்பாய்—ஆமதாபாத் நகரங்களில் கழக நிகழ்ச்சிகள்

புலவர் அறிவுடைநம்பி கலந்துகொண்டார்

பம்பாய், ஆமதாபாத் தி.மு.க. பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளப் புலவர் அறிவுடைநம்பி அவர்கள் 6—2—68 இரவு 8 மணியளவில், தாதர் புகைவண்டி நிலையத்தில் வந்திறங்கினர். ஏராளமான கழகத் தோழர்கள் வரவேற்றனர்.

அன்றிரவே புறப்பட்டு, ஆமதாபாத் சென்று, மறுநாள் நடைபெற்ற கழகத் தோழர் ஒருவரின் திருமணத்தில் கலந்துகொண்டார்; மாலையில் மணிநகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு 8—2—68 அன்று பம்பாய் வந்து சேர்ந்தார்.

தாராவி

9—2—68 இரவு 8 மணியளவில் தாராவி கணேசர் ஆலயத் திடலில் தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம், தோழர் த.மு. பொற்கோ தலைமையில் நடைபெற்றது; தோழர் எம். சின்னப்பா அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

தோழர்கள் திருப்பணி சங்கர், பி. எஸ். செல்லையா, உ. அ. செல்லையா, களந்தை தாமசு ஆகியோர் பேசினர்.

தோழர் அறிவுடைநம்பிக்கு தாராவி தி.மு.க., மாதுங்கா தி.மு.க., இலட்சுமிசால் எம் ஜி. ஆர். மன்றம், விக்ரோலி தி.மு.க, கல்யாணிவாடி எம்.ஜி.ஆர். மன்றம் கும்பர்வாடா கே.வி.கே. சாமி மன்றம், அண்ணா படிப்பகம்—அபூபக்கர்சால், நாவலர் மன்றம்—காலக்கில்லா ஆகியவைகளின் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

இறுதியாக, புலவர் அறிவுடைநம்பி தமிழக அரசின் சாதனைகள் பற்றி நீண்ட உரையாற்றினர். தோழர் எம். எஸ். முத்து நன்றி கூறினர்.

மாதுங்கா

10—2—68 அன்று, மாதுங்கா தி.மு.க. சார்பில் இந்தியன் ஜிம்கானா மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்திற்கு தோழர் அப்பாதுரை தலைமைதாங்கினர்.

தோழர்கள் த. மு. பொற்கோ, தாமசு, களந்தை ச. நேவிசு, கலைக்கூத்தன், அ. சு. சண்முகவேலு ஆகியோர் பேசியபின், புலவர் அறிவுடைநம்பி நீண்டதோர் உரையாற்றினர்.

இலக்கியக் கூட்டம்

மறுநாள் 11—2—68 காலை 10 மணிக்கு தாராவி தி.மு.க. சார்பில் ஏற்பாடாகியிருந்த இலக்கியச் சொற்பொழிவுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர்; அவருடன் தோழர்கள் எஸ். தியாகராசன் நெல்லை சு. தங்கையா, க. பன்னீர்செல்வம் ஆகியோர் பேசினர்; தோழர் எம். எஸ். முத்து அனைவரையும் வரவேற்ருர்; தோழர் த.மு. பொற்கோ தலைமை தாங்கினர்; தோழர் எம். சின்னப்பா நன்றி நவின்ருர்.

கழகத்தின் சார்பில் முதல் முறையாக நடைபெற்ற இலக்கியக் கூட்டமாக இருந்தாலும் ஏராளமான தோழர்களும் பொதுமக்களும் ஆர்வத்துடன் வந்து கலந்துகொண்டனர்.

விக்ரோலி

அன்று இரவு 8 மணியளவில் விக்ரோலியில், தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் வீரை சுலைமான் தலைமை தாங்கினர்; தோழர் நம்பி நாராயணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினர்; தோழர்கள் ஆரிய சங்காரன், பெ. கலைச்செல்வன், த. மு. பொற்கோ, வி. பழனி, ஈசாக்கு, எஸ். தியாகராசன் ஆகியோர் பேசினர்.

இறுதியாக, புலவர் அறிவுடைநம்பி, சீரிய முறையில் சொற்பொழிவாற்றினர்.

எம். ஜி. ஆர். மன்றத்தில்

மறுநாள் தாராவியில் எம்.ஜி. ஆர். மன்ற கல்யாணிவாடி தோழர்களின் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டார்; தோழர் எம். எஸ். கணபதி தலைமைதாங்கினர்; தோழர்கள் எம். சின்னப்பா, கலைக்கூத்தன், காமராசு, சு. செழியன், கணேசன் ஆகியோர் பேசினர். பல அமைப்புக்களின் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. தோழர் எம். சின்னப்பா இல்லத்தில் உணவு கொண்டுவிட்டுப் புறப்பட்டுச் சென்ருர்.

மறுநாள் 13—2—68 அன்று தாயகம் புறப்பட்டுச் சென்ருர். தோழர்கள் ஆரியசங்காரன், த. மு. பொற்கோ, எஸ். தியாகராசன், பெ. சு. கலைச்செல்வன், கலைக்கூத்தன், என். எஸ். மணி, வி. பழனி, செரிமரி இரத்தினம், நெல்லை சு. தங்கையா, சி. இரவீந்திரன் மற்றும் பல தோழர்கள் வந்திருந்து புலவர் அறிவுடைநம்பி அவர்களை வழியனுப்பிவைத்தனர்.

உதகை—மேட்டுப்பாளையம் இருப்புப் பாதையின் சிறப்பு

டில்லிக்கு உணர்த்துகிருர் பெங்களூர்வாசி

"உதகை—மேட்டுப்பாளையம், இரயில் பாதை சிறப்புமிக்கது; இரண்டு பக்கங்களிலிருந்தும் இதில், சாமான் போக்குவரத்து நிறைய நடக்கிறது இந்த இரயிலில் பயணம் செய்யும் ஒருவருக்கு நீலகிரி மலை காட்சிகளைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு கிடைப்பதோடு, பயணமும் மகிழ்ச்சி நிரம்பியதாக இருக்கிறது.

"மேட்டுப்பாளையத்திலிருந்து 8,000 அடி உயரம் வரையில் இந்த இரயில் பாதையைப் போடுவதற்காக எத்தனையோ சிரமங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காகச் செலவழிக்கப்பட்ட மனித உழைப்பும், பொருட்செலவும் ஏராளம்! இப்பொழுது இது எடுக்கப்பட்டுவிட்டால் பொறியர்களும் மற்றவர்களும் அளித்த உழைப்பெல்லாம் வீணாகிவிடும்!

"தென் கிழக்குப் பகுதியில் வருமானமே தராத இரயில் பாதைகள் பல இருக்கும்பொழுது, அவற்றையெல்லாம் விட்டுவிட்டு இதனை மட்டும் எடுத்துவிட முடிவு செய்துள்ள இரயில்வே அமைச்சு, மறு ஆலோசனை செய்யவேண்டும்" என்று பெங்களூரைச் சேர்ந்த கே. ஆர். இராஜாமணி என்பவர், 'டெக்கான் ஹெரால்டு' நாளேட்டில் எழுதியுள்ளார்.

இந்திப் பரீட்சையில் தேர்வு பெறும் மர்மம் வெளியாகிறது!

வினுத் தாளையும் வெளிப்படுத்தி மறைமுகமாகப் பணமும் தரும் வெட்கக்கேடு!

கருநாடக மாநிலத்தில், இந்தியைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ள 'இந்திப் பிரசார பரிஷத்' என்ற நிறுவனம் நடத்தும் இந்தித் தேர்வுகளில் கேள்வித் தாள்கள் முன்னதாகவே வெளியாகிவிடுவது குறித்தும், அரசாங்க ஊழியர்கள் இந்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டிருப்பது பற்றியும் கருநாடகச் சட்டமன்ற மேலவையில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு விடையளித்த கல்வியமைச்சர் சங்கர கௌடா, 'இது குறித்து கல்வித் துறை இயக்குநர் விசாரணை நடத்தவிருக்கிருர்; கேள்வித் தாள்கள் முன்னதாகவே வெளியாகிவிட்டன என்ற குற்றச்சாட்டு எழுந்தவுடனேயே தேர்வுகளைத் தள்ளிவைக்கும்படி பரிஷத்திற்குக் கூறப்பட்டது; அரசாங்கத்தின் முன் அனுமதியின்றி அரசு ஊழியர்கள் இந்நிறுவனத்துடன் தொடர்பு கொண்டுள்ளதும் பணவுதவி பெறுவதும் உண்மை என்பது வெளிப்பட்டால் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்' எனக் கூறியுள்ளார்.

மாவட்டக்கழகப்பள்ளி ஆசிரியர் கோரிக்கை

'கவனிக்கப்படும் என்று' அமைச்சர் உறுதிமொழி

சென்னை, மார்ச் 6—

தமிழக மாவட்ட மன்ற உயர் நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் சார்பில், தமிழகக் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களைத் தமிழக மேலவை உறுப்பினர் திரு. க. அறிவழகன் எம்.ஏ. தலைமையில் திருவாளர்கள் ம. ஹென்றி சாமுவேல், எஸ். சிவசுப்பிரமணியம், டி என் சுப்பிரமணியம் ஆகியோர் அடங்கிய குழுவினர், கோட்டையிலுள்ள அலுவலகத்தில் சந்தித்துத் தங்கள் மாநில மாநாட்டுத் தீர்மானங்களைக் கொடுத்தனர்.

மாவட்ட மன்றப் பள்ளிகளை அரசினர் எடுத்துக்கொள்ளும்பொழுது எவருக்கும் பாதகம் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளுவதாக அமைச்சர் உறுதியளித்தார்.

திருத்துறைப்பூண்டி, மன்னை வட்டங்களில் பயிர்கள் பாதிப்பு

வரி விலக்குக் கோரி அமைச்சரிடம் மனு

சென்னை, மார்ச் 7—

தஞ்சைமாவட்டம் திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி தாலுக்காக்களைச் சேர்ந்த கீழநம்மங்குறிச்சி, மங்கலூர், வடகாடு கோவிலூர், ஆலங்காடு, காரைத்திடல், கும்மட்டித்திடல், சித்தமல்லி, பாலவாய், நொச்சியூர், உப்பூர், பட்டவெளி ஆகிய கிராமங்களில் 1967-ம் ஆண்டு பெய்த பெருமழையாலும், வெள்ளத்தினாலும் விவசாயம் பெருத்த அளவில் பாதிக்கப்பட்டதால் விவசாயிகளுக்கு மிகுந்த நஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிட்டதனாலும், இவர்களால் கூட்டுறவுச் சங்கக் கடன்களை கொடுக்க இயலாத நிலையில் இருப்பதை விளக்கியும், நில வரியை ரத்து செய்யக் கேட்டும் குறுகிய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாக மாற்றித் தருமாறும், இந்த ஆண்டு சாகுபடி செலவிற்குப் போதுமான கடன் கிடைக்க வேண்டியும் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் ந. தருமலிங்கம் தலைமையில்—கீழநம்மங்குறிச்சி ஊராட்சித் தலைவர் இரத்தினசாமி தேவர், கே. எஸ். ஆர். சிதம்பர தேவர், இராம. கணபதி ஆகியோர் சென்னை கோட்டையில் 5—3—68 அன்று உணவு அமைச்சர், கூட்டுறவுத் துறை அமைச்சர் ஆகிய இருவரையும் நேரில் சந்தித்து 500-க்கும் அதிகமாக கையெழுத்திட்ட விண்ணப்பம் ஒன்றையும், கீழநம்மங்குறிச்சி ஊராட்சி தீர்மான நகல் ஒன்றையும் தந்தனர்.

சட்டமன்ற உறுப்பினர் ந. தருமலிங்கம் மாவட்ட நிலையை நன்கு விளக்கியும், கூட்டுறவுக் கடன்களை ஒத்திவைக்கவும் கேட்டுக்கொண்டார்.

தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதாகவும், விவசாயிகளுக்கு எந்தச் சங்கடமும் ஏற்பட விடமாட்டோம் எனவும் அமைச்சர்கள் பதில் அளித்தார்கள்.

அண்ணா அமைச்சரவை முதலாண்டு நிறைவுவிழா

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் பங்கேற்ற நிகழ்ச்சிகள்

6—3—68-ல், தி மு. கழக அரசு ஓராண்டு நிறைவு விழாவினையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சிகளிலும், பொதுக்கூட்டத்திலும் கலந்துகொண்ட அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள், கழக அரசின் சிறப்புப் பணிகளையும், அண்ணா அமைச்சரவையின் சாதனைகளையும் விளக்கிப் பேசினர்.

சென்னை 25-வது வட்டம்

தி.மு.க. சார்பில் காலை 10-30 மணியளவில் முத்துக்கிருஷ்ணன் வீதியில், தோழர் எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் விழா நடைபெற்றது; திரு. என். வி. நடராசன் அவர்கள், கழக ஆட்சியில் ஏற்பட்டுவரும் மறுமலர்ச்சியினை விளக்கிப் பேசினர்.

விழாவில், தொழிற் சங்கத் தோழர் எஸ். இராகவானந்தம் அவர்களும் கலந்துகொண்டார்.

சென்னை 26-வது வட்டம்

தி.மு.க. சார்பில் காலை 9 மணியளவில் அம்மன்கோயில் தெருவில் நடைபெற்ற விழாவில், திரு. என். வி. நடராசன் அவர்கள் கழகக் கொடியை ஏற்றிவைத்து, கழக அமைச்சரவை ஆற்றிய சிறப்புமிக்க பணிகளை விளக்கினர்.

தோழர் நடராசன் தலைமை தாங்கினர்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர் எம். ஆர். கண்ணனும் கலந்துகொண்டார்.

பள்ளிச் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

சிட்லபாக்கம்

அன்று இரவு, தாம்பரத்திற்கு அடுத்த சிட்லபாக்கம் தி.மு.க. சார்பில் நடைபெற்ற மாபெரும் விழாப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட என். வி. நடராசன் அவர்கள், கழக அரசின் ஓராண்டுச் சாதனைகளைத் தெள்ளத்தெளிய விளக்கிப் பேசினர்.

கூட்டத்திற்கு தோழர் சீதாபதி தலைமைதாங்கினர்.

சட்டமன்ற உறுப்பினர் முனு ஆதி, தோழர் முத்துசாமி ஆகியோரும் விழாவில் கலந்துகொண்டு பேசினர்.

நியூயார்க்கின் மற்ரெரு தோற்றம்!

அண்மையில் மாஸ்கோ டெலிவிஷனில், அமெரிக்காவில் உள்ள நியூயார்க் பட்டணத்தைப்பற்றிய காட்சி ஒன்று காண்பிக்கப்பட்டது; 'ஒரே பட்டணத்தின் இரண்டு தோற்றங்கள்' என்று அதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.

அதற்கு விளக்கவுரை ஆற்றியவர் 'வலிவு மிக்கதாயும், வளமை நிறைந்ததாயுமுள்ள நியூயார்க் பட்டணம்தான் வெளியாருக்குக் காண்பிக்கப்படுகிறது; ஆனால், இந்தப் பட்டணத்தின் இன்னெரு தோற்றமும் இருக்கிறது. அங்கே ஆயிரக்கணக்கானவர்கள், வாழவகையின்றி வாழ்க்கையுடன் போராடிக் கொண்டிருக்கிருர்கள்' என்று கூறினர்.

அமெரிக்காவுக்குத் தமிழக 'இருல்' ஏற்றுமதி

சென்னை, மார்ச் 11—

தமிழகத்திலிருந்து 'இருல்' என்ற மீன் வகையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது துவங்கப்பட்டுவிட்டது.

நாள்தோறும் 3 டன் 'இருல்' இரயில்மூலம் கொச்சிக்கு அனுப்பப்பட்டு அங்கு பதனம் செய்யப்பட்டு அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகிறது.

தமிழகத்தில் சிமெண்டு உற்பத்தி

சென்னை, மார்ச் 8—

"நமது மாநிலத்தின் ஆண்டு சிமெண்டுத் தேவை சுமார் 10 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும்; நமது மாநிலத்தில் உள்ள சிமெண்டுத் தொழிற்சாலைகளின் ஆண்டு உற்பத்தி சுமார் 19.5 இலட்சம் டன்; இங்கிருந்து வெளி மாநிலம் அல்லது வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது 9.74 டன்."

இந்த விவரங்களை பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி, சட்டமன்றக் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

"இப்போதுள்ள சூழ்நிலையில் சிமெண்டுக்கு விலைக் கட்டுப்பாடு தேவையில்லை" என்று அவர் மேலும் கூறினர்.

பித்தலாட்டச் செய்திக்கு மறுப்பு

"ஐ. சி. எப். கூட்டுறவுப் பண்டகச் சாலையில் (தி. மு க.) டைரக்டர்கள் கையாடல்" என்று தலைப்பிட்டு, 24—2—68 காங்கிரசு நாளிதழ் ஒன்றில் வெளியிட்ட தவருன செய்தியை மறுத்து சென்னை 45-வது வட்ட தி. மு. க. செயலாளர் கு. தேவராசன் அறிவிப்பதாவது :—

"மேற்படி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள நான்கு பேர்களும் மத்திய அரசில் (I. C. F.) பணிபுரியும் ஊழியர் ஆவர்; அவர்களுக்கும்—திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை; உறுப்பினர்களும் அல்லர்.

"இந்தப் பகுதியில் தங்களை வளர்த்துக் கொள்ளவும், ஐ. சி. எப்.-பில் பணிபுரியும் தொழிலாளர்களிடையே தி. மு. கழகத்தின்பால் ஓர் தீய எண்ணத்தை ஊட்டவும் மேற்படி செய்தியை வேண்டுமென்றே, 'தி. மு. க.' என்பதாக வெளியிட்டுள்ளார்கள்.

"உண்மைக்கு மாருகப் பொய்யான செய்திகளையும், வதந்திகளையுமே வெளியிட்டுவரும் இத்தகைய ஏட்டின் செய்திக்கு செவிசாய்க்க வேண்டாம் என்று தொழிலாளத் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

பூனையின் மகத்துவம்!

இங்கிலாந்து நாட்டில், ஆர்தர் என்ற பூனை, நீதிமன்றத்தில் சர்ச்சைக்குரிய பொருளாக ஆகியிருக்கிறது!

இந்தப் பூனையின் சொந்தக்காரர், ஓர் உணவுத் தயாரிப்பாளரிடம் இதனை விட்டுவைத்திருந்தார்; அவர் அதனை டெலிவிஷனில் காட்டி, தமது பண்டத்தை விளம்பரம் செய்துவந்தார்!

பூனையின் சொந்தக்காரர் உணவுத் தயாரிப்பாளரிடம் சண்டை போட்டுக் கொண்டு, பூனையை இரஷ்யத் தூதுவரகத்தில் ஒளித்துவைக்க முயன்ருராம்!

நீதிமன்றம், 'பூனையை, பண்டத் தயாரிப்பாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்' என்று தீர்ப்பளித்திருக்கிறது!

உலகப் பொருட்காட்சியின் நிலையான கட்டடங்கள் நினைவுச் சின்னமாகும்!

ஏழு வாரங்களாக 30 இலட்சம் மக்கள் கண்டுகளித்தனர்

ஏழு நிலை மாடங்களை உருவாக்கியவர்கட்கு அமைச்சர்கள் வேண்டுகோள்

சென்னை, மார்ச் 11—

“இந்தியத் துணைக்கண்டம், சனநாயகத்தைக் கட்டிக்காத்து வரும் நாடாக இருப்பதால், இங்கு நடைபெறுகின்ற ஒவ்வொரு செயலையும் வெளி உலகம் மிக உன்னிப்பாகக் கவனித்துவருகின்றது; ஆகவே, நாம் இன்னும் விரைவாகத் தொழில் துறையில் முன்னேற்றமடைய முயற்சிக்க வேண்டும்.

“பொருட்காட்சியில் அமைந்துள்ள ஒவ்வொரு தொழிற்கூடமும் நமது கண்ணையும் கருத்தையும் கவர்ந்து, ‘தொழில் துறையில் நாம் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம்—இனி எந்த அளவுக்கு நாம் முன்னேற்றப் பாதையில் அடி எடுத்துவைத்து ஏறுநடை நடக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்’ என்பதை நமக்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியது”

என்று, கல்வி—தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கடந்த ஏழுவார காலமாக அண்ணா நகரில் நடைபெற்று வந்த உலக வர்த்தகத் தொழிற் கண்காட்சி நிறைவு நாள் விழாவிற்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் விளக்கினார்.

அரங்குகளை அண்ணா பார்வையிட்டார்

உலகத் தொழில்—வர்த்தகப் பொருட்காட்சியின் இறுதி நாளான இன்று முதலமைச்சர் அண்ணா அவர்கள்—உடல்நலக் குறைவுற்றிருந்தும்—பொருட்காட்சிக்கு வருகை தந்து, அனைத்து அரங்குகளையும் கண்டுகளித்தார்கள்.

பொருட்காட்சியில் அமைந்த சிறந்த தொழில் அரங்குகளுக்கான சிறப்புப் பரிசுகளை, பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் அளித்துப் பாராட்டுரை வழங்கினார்.

பரிசுகள் பெற்றனர்

அரசுத் துறையில் இரயில்வே அரங்குக்கு முதல் பரிசு அளிக்கப்பட்டது.

மகாராட்டிர மாநிலத் தொழில் அரங்கிற்கு இரண்டாவது பரிசும், அணுசக்தி தொழில் அரங்கிற்கு மூன்றாவது பரிசும் அளிக்கப்பட்டன.

தனியார் துறைக்கான பரிசு—பென்னி கம்பெனி அரங்கிற்கும், இரண்டாவது பரிசு இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன் அரங்கிற்கும், மூன்றாவது பரிசு டெல்லி கிளாத் மில்ஸ் அரங்கிற்கும் அளிக்கப்பட்டது.

மற்றும், பொருட்காட்சியை சிறப்புற நடத்திய ஹாஜா செரீப், ஆர். இராமகிருஷ்ணன், பலராமராவ் ஆகியோருக்கும், மற்றும் பலருக்கும் சிறப்புப் பரிசுகள் அளிக்கப்பட்டன.

சில தகவல்கள்

கண்காட்சியில் 17 அயல்நாட்டு அரங்குகள் உட்பட மொத்தம் 183 அரங்குகள் இடம்பெற்றன; அதற்கான அமைப்புகள் மிக உயர்ந்த முறையில் இருந்தன.

பொருட்காட்சியை, 30 இலட்சம் பேருக்கு மேல் கண்டுகளித்தனர்.

பொருட்காட்சி அமைக்கப்பட்ட இடத்தின் பரப்பளவு 225 ஏக்கர்.

16 இலட்சம் சதுர அடி பரப்பளவுக்கு கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

12.5 மைல் நீளத்திற்குச் சாலைகள் போடப்பட்டன.

இங்கு அமைக்கப்பட்டுள்ள மின்சாரக் கம்பிகளின் மொத்த நீளம் 30 5 மைல்.

7,314 அடி நீளத்திற்குச் சாக்கடைகள் அமைக்கப்பட்டன.

200 தொலைபேசிகள் ஏற்படுத்தப்பட்டன.

5,000 கிலோவாட் மின்சாரம் தேவைப்பட்டது.

நாள்தோறும் 2.75 இலட்சம் காலன் தண்ணீர் செலவாயிற்று.

மொத்தம் 13,000 பேர் பணியாற்றினர்.

பொருட்காட்சி நடந்த இடத்தை, வருங்காலத்திலும் பொருட்காட்சிகள் நடத்துவதற்கு நிரந்தரமான இடமாக வைத்திருக்கத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது.

ஆண்டுதோறும்....

கண்காட்சியின் நிறைவு விழாவிற்குத் தலைமைதாங்கிய அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தமது தலைமையுரையில் மேலும் கூறியதாவது :—

“இந்தப் பொருட்காட்சியில் தொழில் அரங்குகளை அமைத்தோர் பலர், வலிவான கட்டடங்களைக் கட்டியிருக்கின்றனர்! இன்னும் சிலர், பாதி அளவில் வலுவான கட்டடம் கட்டியிருக்கின்றனர், அவர்கள் செல்லும்போது, அவைகளை இடித்து விட்டுச் செல்ல வேண்டியதில்லை; அவைகளை அப்படியே விட்டுச் செல்ல வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு இதே மைதானத்தில் ஆண்டுதோறும் வர்த்தகப் பொருட்காட்சி நடத்துவது பற்றி ஆலோசித்து வருகிறது. அப்படி நடத்தப்படும் பொருட்காட்சியின்போது இப்போது நிலையாகக் கட்டடத்தை விட்டுச் செல்பவர்களுக்குச் சலுகைகள் வழங்கவும் அரசு உத்தேசித்திருக்கிறது.

நிலையான கட்டடங்களை—பொருட்காட்சி வெற்றிகரமாக நடைபெற்றதன் நினைவுச் சின்னமாக—விட்டுச் செல்பவர்களுக்கு இதுபோன்ற பொருட்காட்சியில் தங்கள் அமைப்பை மூன்று முறை நிறுவுவதற்கு அனுமதி அளிக்கப்படும்.

பொருட்காட்சியின் மையப் பகுதியில் உயர்ந்து நிற்கும் ஏழு மாடம், பொருட்காட்சி முடிந்த பின்னும் இதே இடத்தில் நினைவுச்சின்னமாக நிலைபெற்றிருக்குமென்ற நற்செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.”

நினைவுச் சின்னங்களாக...!

பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் பரிசுகள் வழங்கி ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாவது :—

“ஒரு நாட்டின் வளம் அந்நாட்டின் தொழில் வளத்தைப் பொறுத்துத்தான் செம்மையாக அமையும்.

நாமும் இந்தியாவில் தொழிலை வளர்த்திட வேண்டும் என்ற ஆசை காரணமாகவும், குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழகத்தில் இந்தத் தொழில் துறை வளர்ச்சியில் அக்கறை காட்ட வேண்டும் என்பதற்காகவும், ‘தமிழ்நாட்டில் இந்தக் கண்காட்சி நடைபெற வேண்டும்’ என்ற எண்ணம் வெற்றிபெற்றது.

இக்கண்காட்சியில் பங்கேற்ற பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள்—காட்சிக்கூடங்களை வலிவாகக் கட்டியவர்கள் இங்கிருந்து போகும்போது—இடித்துப் போட்டுவிடாமல் செல்ல வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு ஓங்கி எழுப்பப்பட்டுள்ள எழுமாடி மாடங்களும் இருந்தபடியே இருக்குமானால், அவைகள், பொருட் காட்சி நடந்ததற்கான நினைவுச் சின்னங்களாக இருக்குமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவைகளை அப்படியே விட்டுச் செல்பவர்களுக்கு, மூன்றுமுறை இலவசமாகப் பொருட் காட்சியில் இடம்பெற சலுகை அளிக்கப்படும்.”

செய்தி நிருபராகிறார் இராணியின் செல்வன்!

‘சண்டே மிர்ரர்’ என்னும் இலண்டன் வார இதழ் ஒன்று, இராணி எலிசபெத்தின் மகன் இளவரசர் சார்லசுக்கு, செய்தி நிருபர் பதவியை வழங்கியிருக்கிறது!

சார்லஸ் இளவரசர் இப்போது கல்வி பயின்றுகொண்டிருக்கிறார்!

“சார்லசுக்குப் பொருத்தமான வேலை” என்ற தலைப்பில் துணைத் தலையங்கம் ஒன்று எழுதியிருக்கும் ‘சண்டே மிர்ரர்’, ஏற்கனவே அவர், மாணவர் பத்திரிகை ஒன்றில் பெற்றிருக்கும் அனுபவத்தினைப்பற்றி விளக்கியிருக்கிறது.

‘சிவசேனை’யினர் கிளர்ச்சியின் எதிரொலி!

பம்பாய், மார்ச் 12—

‘சிவசேனை’யினரின் கிளர்ச்சியைத் தொடர்ந்து, பம்பாயிலுள்ள 17 திரைப்பட அரங்குகளில் சென்னையில் தயாரிக்கப்பட்ட இந்திப் படங்களைத் திரையிடுவது ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

கேரள அரசு டஸ் போக்குவரத்துத் துறை நிர்வாகி ‘50 பஸ் கண்டக்டர் பதவிகளுக்கு ஆட்கள் தேவை’ என விளம்பரம் செய்திருந்தார்; இதற்கு, 10,000 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

சனநாயக வெற்றிக்கு மக்கள் உடல் நலனும் முக்கியம்

மருத்துவத் துறையில் தமிழக அரசின் நோக்கங்கள்--- அமைச்சர் சாதிக் பாட்சா விளக்கம்

சென்னை, மார்ச் 12—

“வளங்கெழு அரசு ஒன்றில் மக்களின் உடல் நலனைக் காப்பதும், மக்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுப்பதும் அரசாங்கத்தின் முக்கியக் கடமைகளாகும். எனவே, சமுதாயத்தினருக்கு முன்னேற்ற வகைகளில் திறன்மிக்க மருத்துவப் பணியினை நல்க வேண்டுமென்ற ஆர்வமும் ஊக்கமும் கொண்டு அரசாங்கம் பணியாற்றி வருகிறது. ஏனெனில் சனநாயக நிர்வாகம் இறுதியில் வெற்றியடைய வேண்டுமென்றால், அது இந்த நாட்டு மக்களின் சிறந்த உடல் நலனைப் பொறுத்தே இருக்கிறது.

“அடுத்தடுத்த நிறைவேற்றப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களில் ஏற்கனவே உள்ள மருத்துவப் பணிகளை விரிவுபடுத்துவதும், எல்லா மக்களுக்கும் சிறந்த மருத்துவ வசதிகளை அதிக அளவில் எளிதில் கிடைக்கச் செய்வதும், மருத்துவப் பட்டதாரிகளின் எண்ணிக்கையையும், செவிலியர், மருந்து கலப்பவர்கள் முதலிய துணைப் பணியாளர்களின் எண்ணிக்கையையும் உயர்த்துவதும், குடும்ப நலத் திட்டத்தைப் பரப்புதலும் நாட்டு மக்களின் உடல் நலனைப் படிப்படியாக பேணி வளர்ப்பதும் இந்த அரசாங்கத்தின் நோக்கங்களாக இருந்து வந்துள்ளன”

என்று, மருத்துவத்துறை அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்கள், இன்று சட்டமன்றத்தில் விளக்கமளித்தார்.

மருத்துவத்துறை மானியமாக ரூ. 13,46,99,600 ஒதுக்கக் கோரி அவர் ஆற்றிய குறிப்புரையில் மேலும் தெரிவித்ததாவது :—

“1968-69-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம், மருத்துவத் துறையில் முந்திய ஆண்டைவிட செலவு 0.7 சதவீதம் அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது.

‘மருத்துவமனைகளும், மருந்தகங்களும்’ என்பதன்கீழ் ரூ. 958 இலட்சம் செலவிட இதில் வகை செய்யப்பட்டுள்ளது; இந்தத் தொகை, மருத்துவக் கோரிக்கையில் 71 சதவீதமாகும்.

மொத்தச் செலவில் 14 சதவீதத்தைக் குறிக்கிற ரூ. 183 இலட்சம், ‘மருத்துவக் கல்லூரிகளும் பள்ளிகளும்’ என்பதன்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

மொத்தச் செலவில் 10 சதவீதம் ‘அரசாங்கத் தொழிலாளர் காப்புறுதிக்கு’ச் செலவிடப்படுகிறது.

‘மருத்துவப் பணியாளர்’—‘மருத்துவ உதவிக்கான மானியங்கள்’ என்பவற்றின்கீழ் ரூ. 72 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக, மருத்துவக் கோரிக்கையின்கீழ் ஆகின்ற செலவு ஆண்டுதோறும் படிப்படியாக உயர்ந்துகொண்டேபோகிறது.”

பூமிக்குள் புதைகிறது !

மேற்கு வங்க மாநிலத்தில் பர்த்துவான் மாவட்டத்தில் ‘குல்தி’ என்ற இடத்திலுள்ள உருக்கு வார்ப்படத் தொழிற்சாலை ஒன்று நிலத்தில் புதைந்து வருகிறது.

சென்னை 71-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு

“சென்னை 71-வது வட்ட தி.மு.க. கிளையில் ஏற்பட்டுள்ள அவைத் தலைவர், செயலாளர், செயற்குழு உறுப்பினர்கள் (6-பேர்) ஆகிய காலி இடங்களுக்கு, 16—3—68 இரவு 9-மணிக்கு பகுதிக் கழக துணைச் செயலாளர் சி. ஆதிகேசவன் தலைமையில் தேர்தல் நடைபெறும்; பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகைதர வேண்டுகிறேன்.

“தேர்தல் நடைபெறும் இடம்:— ‘தாயகம்’, 13, முக்தாருன்னிசா பேகம் தெரு” என, திருவல்லிக்கேணி தொகுதி தி. மு. க. செயலாளர் மு. வரதராசன் அறிவிக்கிறார்.

நடக்க இருப்பவை

13--3--68

ஓலகடம்

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு காந்தி திடலில்; தலைவர்: டி.கே. நாச்சிமுத்து; பேசுவோர்: க. அன்பரசு, சிவ. நடராசு, சி. குருமூர்த்தி, இரா. செங்குட்டுவன்.

தேனி

நகர தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு மேற்குச் சந்தையில்; தலைவர்: பி. பாண்டியன்; பேசுவோர்: சி.பி. சிற்றரசு எம்.எல். செ. அய்யப்பன், மற்றும் பலர்.

14--3--68

பொன்மலைப்பட்டி

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு வ.உ.சி. திடலில்; தலைவர்: ஆ. முத்தையன்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., கு. பராங்குசம், கூ.மு. பெரியசாமி, அ. நடராசன், கோ. இராமானுசம், கமலாவதி, இரெ. முருகையன்.

அத்திமூர்கலியம் காலனி

தி.மு.க. துவக்கவிழா; மாலை 6 மணிக்கு மங்கைவெளி மைதானத்தில்; தலைவர்: பி.வி. இராசமாணிக்கம்; பேசுவோர்: எம்.கே. ஏழுமலை, ஏ.பி. கரிகாலன்; டி. ஆர். ஜெகதீசன், தொ.ப. சீனிவாசன், பி. கிருட்டினன், ப. பரந்தாமன், கே. கோவிந்தசாமி. (ஊர்வலம் நடைபெறும்)

கைத்தறிக்குப் பாதுகாப்பு

விசைத் தறிகளால் பாதிக்கப்படாதிருக்க நடவடிக்கை

சென்னை, மார்ச் 12

“தமிழ்நாட்டில் விசைத் தறியைப் புகுத்துவதால் கைத்தறி நெசவு பாதிக்கப்படாமல் இருக்கும் பொருட்டு, கைத்தறிக்குரியவையல்லாத பிறவகைத் துணிகளையே விசைத் தறிகளில் உற்பத்தி செய்யவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது”

என்று தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், இன்று சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

“விருதுநகர் தோல்விக்கு, ‘பெரிய தவறுகள்’—‘பெருமை தரத்தக்க குறைபாடுகள்’ இருக்கும்போது, இத்தனை கேள்விகளுக்கு இடம் அளிக்கும்வகையில் இவ்வளவு நாட்கள் கழித்துக் காமராசர், இத்தனை ‘சிறிய’ காரணம் கற்பித்திருப்பது, அவரது தகுதிக்குச் சரியானதல்ல என்று அனைவரும் வருந்தவே செய்வார்கள்” என்பதனை, நம்மால் எடுத்துக் காட்டாமல் இருக்க முடியவில்லை!

—எஸ். ஆர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.